RPAD

**உறுப்பினர் செயலர், புதுக்கோட்டை கூட்டு உள்ளூர் திட்டக் குழுமம்**

**நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் சிவகங்கை அவர்களின் நடவடிக்கைகள்.**

**முன்னிலை: திருமதி.க.பாண்டீஸ்வரி, AMIE., MBA.,**

**ந.க.எண்:71/2020/சிட-3** **நாள்:06.02.2020.**

பொருள்: நகர் ஊரமைப்பு - கட்டடம் - புதுக்கோட்டை கூட்டு உள்ளூர் திட்டக் குழுமம் - புதுக்கோட்டை மாவட்டம்/வட்டம்/நகராட்சி, புதுக்கோட்டை டவுன் போஸ்நகர் பிளாக்-135, நகரளவை எண்:6/80,7/81,மற்றும் 8/82-இல் குடிசை மாற்று வாரிய குடியிருப்பு உபயோகக் கட்டடம் 15196.39சமீ பரப்பளவு இடத்தில் தரைதளம் + 3 தளங்கள் கொண்ட 528 குடியிருப்பு கட்டடங்கள் கட்டுமானத்திற்கு கட்டட அனுமதி வழங்க - தொழில்நுட்ப இசைவு அளித்தல் - தொடர்பாக.

பார்வை:
1) செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் அவர்கள் கடிதம் ந.க.எண்:1359/AE(P)/2019 நாள்:26.12.2019. (இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள்:07.01.2020.)
2) புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.இ5/9447/2019 நாள்:17.06.2019.
3) புதுக்கோட்டை உள்ளூர் திட்டக் குழுமம் தீர்மான எண்.2 நாள்:24.01.2020.
4) நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்:19702/2019/TCP-6 நாள்:14.11.2019.
5) இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள்:27.01.2020.
6) நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:4367/2019/நஊ.2 நாள்:31.10.2019.
7) நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்கள் கடிதம் ந.க.எண்:23152/2011/ நாள்:11.11.2011.
8) அரசாணை நிலை எண்:86 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்:28.03.2012.
9) நன்னிலை வரி கட்டணம், மனுதாரர் செலுத்தி இவ்வலுவலகத்தில் சமர்ப்பித்த நாள்:06.02.2020.

*****

**உத்தரவு:-**

புதுக்கோட்டை கூட்டு உள்ளூர் திட்டக் குழுமம், புதுக்கோட்டை மாவட்டம்/வட்டம்/நகராட்சி, புதுக்கோட்டை டவுன் போஸ்நகர் பிளாக்-135, நகரளவை எண்:6/80,7/81,மற்றும் 8/82-இல் - குடிசை மாற்று வாரிய குடியிருப்பு உபயோகக் கட்டடம் 15196.39சமீ பரப்பளவு இடத்தில் தரைதளம் + 3 தளங்கள் கொண்ட 528 குடியிருப்பு கட்டுமானங்கள் கொண்ட வரைபடத்திற்கு ஒப்புதல் இசைவு அளிக்கப்படுகிறது.

| தளவிபரம் | Type A<br>பரப்பளவு விபரம் | தளவிபரம் | Type B<br>பரப்பளவு விபரம் |
|---|---|---|---|
| தரைதளம் (7 Block) | 3088.82சமீ | தரைதளம் (3 Block) | 1812.24சமீ |
| முதல்தளம் (7 Block) | 3088.82சமீ | முதல்தளம் (3 Block) | 1812.24சமீ |
| இரண்டாம் தளம் (7 Block) | 3088.82சமீ | இரண்டாம் தளம் (3 Block) | 1812.24சமீ |
| மூன்றாம் தளம் (7 Block) | 3088.82சமீ | மூன்றாம் தளம் (3 Block) | 1812.24சமீ |

EXECUTIVE ENG..
SLUM CLEARANCE BOARD
TRICHY DIVISION.

பரப்பளவு கொண்ட உத்தேச குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு பார்வை 6-ல் கண்ட அதிகார பகிர்மானத்திற்கு உட்பட்டு கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் மனை ஒப்புதல் மற்றும் கட்டிட அனுமதி வழங்க இசைவு அளிக்கப்படுகிறது. ஒப்புதல் அளிக்கப்பட்ட கட்டிட வரைபடத்திற்கு **க.வ./உ.செ.(பு.கூ.உ.தி.கு.)எண்:02/2020** என எண்ணிட்டு அனுப்பப்படுகிறது.

**சிறப்பு நிபந்தனைகள்:**

1. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundation.

2. Planning permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning permissions is issued subject to the condition that the applicant/developer and also the architects/Licensed Surveyors' and the structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

3. "நகர் ஊரமைப்புத்துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன்மூலம் விண்ணப்பத்தாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பத்தாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பத்தாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.
சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல"

4. கட்டுமானங்கள் நடைபெறும் இடத்தில், பொது மக்கள் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளின்படி, தளப்பரப்பு விகிதம் (FSI) திறவிடங்கள் (Setback), வாகன நிறுத்துமிடம் மற்றும் பல நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

5. கட்டிடம் கட்டும்போது அரசு அனுமதி பெற்ற வயரிங் காண்ட்ராக்டர் மூலமாக வயரிங் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

6. OSR (Park) என ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தினை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்படவேண்டும்.

**நிபந்தனைகள்:**

1) உத்தேச குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு Solar System அமைக்கப்பட வேண்டும்.
2) வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
3) மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.
4) தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
5) மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்: 138 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 11.10.2002ன்படியும் கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
6) உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.
7) மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசுதடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.

EXECUTIVE ENGINEER
SLUM CLEARANCE BOARD
TRICHY DIVISION.

8) உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
9) அரசாணை எண்: 341/நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை நாள்: 3.11.04-ன் படி செப்டிக் டேங்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.
10) சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு FLY ASH BRICKS மற்றும் Materials பயன்படுத்தப்படவேண்டும்.
11) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மைநகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது உத்தேச நிலத்தில் பிரசுரிக்கப்பட வேண்டும்.
12) உத்தேச கட்டிடத்தின் கழிவுநீர் வெளியேற்றுதல் தொடர்பாக/ STP Design-ற்கு தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியசட்டம் 1974 பிரிவு 25 (Water Act)ன் படிமேற்படி வாரிய இணக்கம் (Consent) பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

மனுதாரர் நன்னிலைவரி கட்டணம் **ரூ.53,100/– (ரூபாய் ஐம்பத்திமுன்றாயிரத்து நூறு மட்டும்) Scrutiny Fee ரூ.62,100/– (ரூபாய் அறுபத்திரண்டாயிரத்து நூறு மட்டும்) வளர்ச்சிக்கட்டணம் ரூ.1,13,300/- (ரூபாய் ஒரு இலட்சத்து பதிமூன்றாயிரத்து முன்னூறு மட்டும்) மற்றும் கூராய்வுக்கட்டணம் ரூ.100/- (ரூபாய் நூறு மட்டும்)** மாநில பாரத வங்கியில் செலுத்தி செலுத்துச்சீட்டின் அசல் மற்றும் நகல் இவ்வலுவலகத்தில் சமர்ப்பித்துள்ளார்.

ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**ஆணையாளர், புதுக்கோட்டை நகராட்சி, புதுக்கோட்டை மாவட்டம்** அவர்கள் மேற்கொண்டு உத்தரவினை விண்ணப்பதாரருக்கு வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

மனுதாரர் மேற்கொண்டு **ஆணையாளர், புதுக்கோட்டை நகராட்சி, புதுக்கோட்டை மாவட்டம்** அவர்களை அணுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

ஒப்புதலளிக்கப்பட்ட உத்தரவு நகல் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புகைச்சான்று அனுப்புமாறு **ஆணையாளர், புதுக்கோட்டை நகராட்சி, புதுக்கோட்டை மாவட்டம்** அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

06/02/20

உறுப்பினர் செயலர்,
புதுக்கோட்டை கூட்டு உள்ளூர் திட்டக் குழுமம்/
நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்
சிவகங்கை மண்டலம், சிவகங்கை.

**இணைப்பு:**
உத்தரவு மற்றும் இருதொகுப்பு வரைபடங்கள் மற்றும் படிவம்.

06/02/2020

**பெறுநர்:**
ஆணையாளர்,
புதுக்கோட்டை நகராட்சி,
புதுக்கோட்டை மாவட்டம

**நகல்:**
1. செயற்பொறியாளர்
தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்
திருச்சிராப்பள்ளி கோட்டம்.
மதுரை ரோடு, பாலக்கரை
திருச்சிராப்பள்ளி - 8
2. தொழில்நுட்ப வைப்பறை - ஒரு தொகுப்பு வரைபடத்துடன்.

EXECUTIVE ENGINEER
SLUM CLEARANCE BOARD
TRICHY DIVISION.

29

# புதுக்கோட்டை நகராட்சி

## கட்டிட அனுமதி உத்தரவு

க.வி.எண்:109/CP/20-21/0001179
பி.ஏ எண்:109/BPA/2020/00206

உ.ஆணை:109/BL/2020/00093

நாள் :22/07/2020

பொருள்: கட்டிட அனுமதி புதுக்கோட்டை நகராட்சி கிராமம், நகரளவு எண் 6,7,8 தொகுதி 17, 6/80, 7/81, 8/82 பகுதி 135, கதவுமனை எண்:6 கட்டிட அனுமதி வழங்கி உத்தரவிடுதல் 80 81 82
பார்வை : செயற்பொறியாளர் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் என்பவரது 10-Jul-2020 ம் தேதிய விண்ணப்பம்.
மனையின் பரப்பளவு-163572.000 சதுர அடி

| S.No | Build Floor Name | UsageName | BuildupSqft |
|---|---|---|---|
| 1 | Ground Floor | RESIDENTIAL | 52754.550 |
| 2 | First Floor | RESIDENTIAL | 52754.550 |
| 3 | Second Floor | RESIDENTIAL | 52754.550 |
| 4 | Third Floor | RESIDENTIAL | 52754.550 |
| | | Total Sqft | 211018.200 |

செலுத்தப்பட்ட கட்டணங்களின் விவரம் பின்வருமாறு

| S.No | கட்டணம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | கழிவுநீர் நீர் தொட்டி | 400.00 |
| 2 | ஆழ்துளை கிணறு அமைக்க | 600.00 |
| 3 | கட்டிடம் கழிவுகளை அகற்றுதல் | 3000.00 |
| 4 | மழை நீர் சேகரிப்பு முன் வைப்புத் தொகை | 10000.00 |
| 5 | விளம்பரப்பலகை வைப்பு | 10000.00 |
| 6 | தண்ணீர் தொட்டி | 24000.00 |
| 7 | மனை உட்பிரிவு கட்டணம் | 24000.00 |
| 8 | ஆய்வுக் கட்டணம் | 39220.00 |
| 9 | மனை அங்கீகரிக்க | 45600.00 |
| 10 | பொருள் சேகரிப்புக் கட்டணம் | 184125.00 |
| 11 | கழிவறை | 211200.00 |
| 12 | கட்டிட உரிமையாணைக் கட்டணம் | 633360.00 |
| | Total Amount | 1185505.00 |

| Receipt No | Receipt Date | Amount | Payment Mode |
|---|---|---|---|
| 109/01/1/20-21/0003350 | 22/Jul/2020 | 1185505.00 | DD |

| Fees Description | DD/Challan No | DD/Challan Date | Amount |
|---|---|---|---|

உத்தரவு :

1920-ம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 200, 201-வது பிரிவின் கீழ் கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள கிராமம்:,கதவுமனை எண்:6, போஸ்நகர் 1 ம் வீதி, BOSE NAGAR, BHUVANESWARI AMMAN TEMPLE , தொகுதி: 17, பகுதி: 135,நகரளவு எண்: 6/80,7/81,8/82 உள்ள இடத்தை அங்கீகரித்து வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மாறுதல் கட்டிடம்/ கூடுதல் கட்டிடம்/ புதுப்பித்து கட்டிக்கொள்ள கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்படுகிறது. அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின் ஒரு தொகுப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

கட்டிடம் கட்ட குறித்த இடத்தில் கட்டிடத்தை வரைபடத்தில் வரைந்துள்ளபடி/ திருத்தப்பட்டபடி கீழ்கண்ட கட்டுபாடுகளுக்கு 22/07/2020 தேதியில் இருந்து 21/07/2025 தேதிக்குள் கட்டிக்கொள்ள உரிமை ஆணை வழங்கப்படுகிறது.

22/7/2020

ஆணையாளர்
புதுக்கோட்டை நகராட்சி

22/7/2020

பெறுபவர்,

செயற்பொறியாளர் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம்
TS NO 135/80.81.82,போஸ்நகர் 1 ம் வீதி, BOSE NAGAR, BHUVANESWARI AMMAN TEMPLE

நகல் : நகரமைப்பு ஆய்வர் - கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட தேதியை தெரிவிக்க
நகல் : வருவாய் ஆய்வாளர் - கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்னர் கட்டிடத்திற்கு வரிவிதித்து வரிவிதிப்பு எண்ணை தெரிவிக்க
நகல் : வருவாய் பிரிவு எழுத்தர்.

EXECUTIVE ENGINEER
SLUM CLEARANCE BOARD,
TRICHY DIVISION.